# பதினைந்து நிமிடங்கள்

நா. சதானந்தம்




OFFICE OF THE REGISTRAR
18 MAY
MADRAS

வெளியீடு 6

# பதினைந்து நிமிடங்கள்

★

நா. சதானந்தம்

—விருதை மகிழ்நன்—

★

மகிழ்ச்சி இல்லம்

மகிழ்ச்சி மாத இதழ் விருதுநகர் சதானந்தா அச்சகம்.

முதற்பதிப்பு ஏப்ரல் 1952.

உரிமை பெற்றது

## பதிப்புரை

இந்தச் சிறுபுத்தகத்தைப் படித்து முடிக்க பதினைந்து நிமிடங்களுக்கு மேல் ஆகாது என்ற காரணத்தால் தான் இப்புத்தகத்தின் தலைப்பு "பதினைந்து நிமிடங்கள்" என்று கொடுக்கப்பட்டிருக்கின்றதே தவிர, வேறு ஒன்றுமில்லை.

மக்களின் அன்றாட வாழ்க்கையில் நிகழும் சம்பவங்களைக்கொண்டே இதில் வரும் நிகழ்ச்சிகள் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. இதில் அடங்கிய கருத்துக்கள் 15 நிமிடங்களல்ல—15 வருடங்களுக்குமல்ல—ஜீவிய காலம் முழுவதுமே சிந்தையில் வைத்துக்கொள்ள வேண்டியவையாகும்.

உங்களின் பொன்னான நேரத்தை ஏன் வீணாக்க வேண்டும்? உடனே கண்ணையும் கருத்தையும் உள்ளே செலுத்துங்கள், 15 நிமிடம்.

**மகிழ்ச்சி இல்லத்தார்.**

**விலை 4 அணா**

சதானந்தா அச்சகம், விருதுநகர்.

# எச்சரிக்கை!

"அம்மா! அம்மா! வீட்டில் யார் இருக்கிறது?"

"என்னப்பா? என்ன சங்கதி?"

"இதுதானே குமஸ்தா வாசுதேவர் வீடு?"

"ஆமா, இதுதான்! என்ன சமாச்சாரம்?"

"ஐயா மளிகைக் கடையில் நிற்கிறார். ஏதோ சீனி வாங்கி வைத்திருக்கிறாராம். தங்களிடம் இரண்டுரூபாயும், ஒரு பையும் வாங்கிவரச்சொன்னார்"

"அப்படியா! கொஞ்சம் பொறு, அடுத்த வீட்டிலாவது ரூபாய் கடன் வாங்கித் தருகிறேன்" என்று கூறி, பரபரப்புடன்ஓடி ரூபாய் வாங்கிக்கொண்டுவந்து பையுடன் கொடுத்து அனுப்பிவிட்டு, "அப்பாடி! ஒரு வாரத்திற்கு சீனிக் கஷ்டம் தீர்ந்தது. இன்று சாயந்திரமாவது கொஞ்சம் வாய்க்கு ருசியா காபி சாப்பிடலாம்" என்று சொல்லிக்கொண்டே சமையல் கட்டிற்குள் நுழைந்தாள் வாசுதேவரின் மனைவி.

சிறிதுநேரத்தில் வீட்டிற்குள் நுழைந்த அவள் கணவன், "கமலா, கேட்டியா சங்கதியை, நம்ம சுப்பிரமணியன் வீட்டில் எவனோ ஒருவன் அவன் பெண்சாதியிடம், 'உங்கள் புருஷன் ஐந்து ரூபாய்க்கு அரிசி வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறார். ரூபாயும் பெட்டியும் வாங்கி வரச் சொன்னார்' என்றுகூறி ரூபாயையும் பெட்டியையும்

அடித்துக்கொண்டு போய்விட்டானும். காலம் இருக்கிற நிலையில் எச்சரிக்கையாக இருக்கவேண்டாமோ'' என்றார்.

''அப்படியா சங்கதி! என்ன இருந்தாலும் வீட்டில் இருக்கிறவள் கொஞ்சம் ஜாக்கிரதையாகத்தான் இருந்திருக்க வேண்டும். அதிருக்கட்டும், எங்கே சீனியைக் கொடுங்கள், இன்றுவது நல்ல காபி சாப்பிடலாம்!''

''என்ன! சீனியா?''

''கேலியா பண்ணுகிறீர்கள்! கொஞ்ச நேரத்திற்கு முன் ஒருவனை அனுப்பி இரண்டுரூபாயும், பையும் வாங்கி வரச் சொல்லி அனுப்பியிருந்தீர்களே! சில்லறை இல்லாமல் ஐந்து ரூபாய் நோட்டை அடுத்த வீட்டில் வாங்கி அப்படியே அல்லவா கொடுத்தனுப்பினேன்!''

''நாசமாப் போச்சு போ! இங்கேயும் நாமத்தைக் குழைத்துப் போட்டுவிட்டுப் போய்விட்டானு? போகட்டும் இனியாவது எச்சரிக்கையாக இரு''



# அபாய அறிவிப்பு!

கோவில்பட்டி ஸ்டேஷனில் வந்து நின்றது தூத்துக்குடி எக்ஸ்பிரஸ். மணியாச்சி ஜங்ஷனில் சாப்பிட நேரமில்லாது வந்தவர்களில் பலர் இறங்கி காபி, பலகாரம் சாப்பிட விரைந்தனர்.

பாதி சாப்பிட்டவர்களும், சாப்பிடாதவர்களுமாக இருக்கும்பொழுதே வண்டி நகர ஆரம்பிக்கவே அப்படி அப்படியே காபி வட்டைகளையும், டம்ளர்களையும் போட்டுவிட்டு, சில்லறை கொடுத்தும், வாங்காமலும் ஓடி, எதிர்ப்பட்ட வண்டிகளில் தொத்த ஆரம்பித்தனர் பிரயாணிகள்.

இந்நிலையில் மெதுவாகச் சென்றுகொண்டிருந்த வண்டியின் ஒரு கம்பார்ட்மெண்டிற்கு முன் நன்கு அலங்காரமாக ஆடையணிந்த ஒருவர்—அந்த வண்டியில் பிரயாணம் செய்துவந்தவர்—ஓடி வந்து வண்டியுடனேயே நடந்துகொண்டே உள்ளேயிருந்தவரிடம் "மிஸ்டர்! அந்த டிரங் பெட்டியைக் கொஞ்சம் எடுங்க; நான் தேடிப் போகிற ஆள் இங்கேயே வந்துவிட்டார். கொஞ்சம் சீக்கிரம் எடுங்கோ'' என்று வண்டியின் வேகத்திற்குத் தக்கபடி விரைந்து வந்துகொண்டே கேட்டுக்கொண்டுவந்த பரிதாபத்தைப் பார்த்து உள்ளிருந்தவர் அவர் காண்பித்த டிரங்கை எடுத்துக் கொடுப்பதற்கும், வண்டி பிளாட்பாரத்தின் கோடியைக் கடப்பதற்கும் சரியாக இருந்தது.

காபி சாப்பிட இறங்கி வண்டி புறப்பட்டுவிட்டது காரணமாக கோவில்பட்டியில் வண்டி மாறி ஏறிய ஜெயராம், சாத்தூர் வந்தவுடன் தான் முன் ஏறியிருந்த வண்டியை அடைந்து, நாட்டில் நடைபெறும் நாகரீகத் திருட்டுக்களையெல்லாம்பற்றிப் பேசிக்கொண்டு வந்தார். வண்டி விருதுநகரை அடைந்ததும் கீழே இறங்குவதற்காகத் தன்னுடைய டிரங் வைத்த இடத்தைப் பார்த்தார். பெட்டி காணப்படவில்லை. அங்கிருந்தவர்களிடம் அதைப்பற்றி விசாரிக்க, அவர்கள் கோவில்பட்டி ஸ்டேஷனில் நடந்த விஷயத்தை சாங்கோபாங்கமாகக் கூறினர்கள்.


மாதந்தோறும்

மகிழ்ச்சி

படிக்கின்றீர்களா?

இல்லையேல்

ரூ. 2—4—0 அனுப்பினல்

ஒரு வருடத்திற்கு

உங்கள் வீடு தேடி வரும்!

# உபசாரம் பலே!

அநேக நாட்களுக்கப்புறம் அன்று அவன் மனைவி அவனை உபசாரணை செய்தது அவனுக்கே வியப்பை அளித்தது. அவன் அன்று மாலை 4 மணிக்கு ஆபீஸிலிருந்து வீட்டிற்குள் நுழைந்தவுடன் புன்முறுவல் பூத்து வரவேற்றதோடு, அவன் கேட்குமுன்பே காபியையும் ஊற்றிக்கொண்டுவந்து கொடுத்தாள்.

அவன் காபி குடித்துக்கொண்டிருக்கும்பொழுது அன்பாக அவன் கன்னத்தைத் தடவிக்கொண்டே "ஐயோ, இது என்ன நெருஞ்சிமுள் மாதிரி குத்துகிறதே! 'சேவ்' செய்துகொண்டால் எவ்வளவு லட்சணமாக இருக்கும்" என்று கூறினாள்.

"சேவ் செய்து இரண்டு நாட்கள்கூட ஆகவில்லை, அதற்குள் இப்படி இருக்கிறது. ஆண்களுக்கு இது ஒரு சாபக்கேடு என்றுதான் நினைக்கிறேன் இப்படித் தாடி, மீசை முளைப்பது"

"சரிசரி சேவ் செய்துகொண்டு, நல்ல வேஷ்டியும், சட்டையும் போட்டுக்கொள்ளுங்கள்"

"சேவ் செய்துகொள்ளுகிறேன்; வேஷ்டியும் சட்டையும் நேற்று மாற்றியதுதானே!"

"சூ...சொன்னால் கேளுங்கள். ஒவ்வொருத்தர் எவ்வளவு 'டிப் டாப்'பாக இருக்கிறார்கள். உங்களையும் கனஜோராக பார்க்கவேண்டுமென்று எனக்கும் ஆசை இருக்காதா?"

"பேஷா நீ சொன்னபடி செய்கிறேன்" என்று கூறி அவ்விதமே செய்தான் குருமூர்த்தி.

"என்னைத் தனியே விட்டுட்டு இன்று வெளியில் எங்கும் போகக்கூடாது. என்னுடனேயே இருக்கவேண்டும்"

"இன்று நீ இருக்கும் ஜோருக்கும், உன் அன்பிற்கும் உன்னைவிட்டுப் போவதில்லை என்றுதான் அப்பொழுதே முடிவு செய்துவிட்டேனே! இருந்தாலும் மணி $5\frac{1}{2}$தானே ஆகிறது. இப்படி இருவரும் வீட்டிற்குள்ளேயே கிடப்பதற்கு சற்று வெளியே காற்றாடப் போய்வருவோமே" என்றான்.

"வெளியேவா, சினிமாவிற்கல்லவா போக உத்தேசித்திருந்தேன்"

அப்பொழுதுதான் புரிந்தது அவனுக்கு அவள் அதுவரை செய்த உபசாரத்தின் பெருமை!



# திருடர்கள்!

"என்ன உங்கள் நண்பர் ஜெயசீலர் வந்துவிட்டுப் போகிறாரே, என்ன சமாச்சாரமாம்?" என்று கேட்டுக் கொண்டே விஜயன் இருந்த அறைக்குள் நுழைந்தாள் அவன் தர்மபத்தினி பிரேமா.

"வேறு ஒன்றுமில்லை, பங்குனிப்பொங்கல் உற்சவம் வருகிறதல்லவா? அன்று, போன வருடம் இரண்டு 'தடியர்கள்' வைக்கோல் போர் போல் பெரிய சாக்கிற்குள் நுழைந்து உருமாறி வேஷமணிந்து பார்க்கப் பயங்கரமாக வந்தார்களே அதுபோல் இவ்வருடம் நாம் போடுவோமா என்றான்"

"நீங்கள் சரியென்று கூறிவிட்டீர்களா? ஐயோ அதை நினைத்தாலே பயமாக இருக்கிறது. சென்றவருடம் வந்தவர்கள் நாங்கள் உட்கார்ந்திருந்த இடத்தில் வந்து என்ன ஆட்டம் ஆடினார்கள் தெரியுமா? கண் ஒன்றுதான் வெளிக்குத் தெரிந்தது. பார்க்கவே பயங்கரம். எங்கள் அண்ணாவை மறித்து உண்டியலில் காசுபோடச் சொல்லி கட்டாயப்படுத்தி, அவர் மேல் களிமண், சகதியெல்லாம் இழுவிவிட்டார்கள். சின்னஞ்சிறிய குழந்தைகளெல்லாம் பயந்து அலறிவிட்டன. அதில் ஒருவன் அடிக்கடி என்

னைக் கவனித்து ஆர்ப்பரித்தது, பெரும்பீதியை உண்டாக்கி விட்டது. வேண்டவே வேண்டாம் அந்தமாதிரி வேஷம் உங்களுக்கு. போனவருடம்தான் கல்யாணம் ஆகவில்லை. சின்னதுமாதிரி எது வேண்டுமானாலும் ஆடியிருப்பீர்கள். இப்பொழுது ஒரு குழந்தைக்குத் தகப்பன் ஆகப்போகிறீர்கள். அதிருக்கட்டும், போனவருடம் அந்த ராக்ஷச வேஷம் போட்டவர்கள் யாராம்? எதுவும் நேர்த்திக் கடனுக்காகப் போட்டார்களா என்ன?”

“ஆமாம் அதில் ஒருவன் நேர்த்திக்கடன் முடிந்து விட்டது! மற்றவன் நேர்த்திக்கடனுக்காகத்தான் இவ் வருடமும் போட அவன் கூப்பிடுகிறான்”

“என்ன சொல்லுகிறீர்கள்! அப்படியானால் அந்த வேஷதாரிகள்.........”

“நாங்கள்தான். வேஷம் போட்டுக்கொண்டால், கூச்சமில்லாமல் கூட்டத்தில் பெண் பார்ப்பதற்கு வசதியாக இருக்குமல்லவா?”

“சரியான திருடர்கள்!” என்று கூறி அவன் கன்னத்தில் செல்லமாகத் தட்டிவிட்டு ஓடினாள் பிரேமா.



# அலங்காரப் பாத்திரம்!

சின்னாளபட்டி பெரிய நகரமில்லாவிட்டாலும், குக்கிராமம் போன்றதுமல்ல. சுற்றியுள்ள கிராமங்களுக்கு அதுதான் பெரிய ஊர். வாரமொருமுறை சந்தையும் அங்குதான் கூடும்.

ஆகவே அங்கு டூரிங்சினிமா முதல் சுற்று நாற்காலி போட்ட பார்பர் ஷாப் வரை சகலமும் இருந்தன. இவ்வளவு இருந்தும் ஆங்கில வைத்தியம் தெரிந்த வைத்தியர் இல்லாதது ஒரு பெருங் குறையாகவே இருந்தது.

* * * *

ஒருவாரமாக இருந்த காய்ச்சல் அன்று மிகவும் அதிகமாகி, புலப்பம்வேறு கொடுத்துவிடவே பயந்தே போய்விட்டார் பிள்ளையைப் பெற்றவர். அந்த ஊரில் அவர் ஒரு பெரிய பணக்காரர். ஆகவே அருகில் உள்ள திண்டுக்கல்லுக்கு ஆளைக் காரில் அனுப்பினார் டாக்டரை அழைத்துவர.

அதற்குள் அவ்வூரில் பிரபலமான நாட்டுவைத்தியர் ஒருவரைக் கூட்டிக்கொண்டு வந்து காட்டிக்கொண்டிருந்தார்கள். நாட்டு வைத்தியரானாலும் ஆள் கால்சட்டை எல்லாம் போட்டு ஆங்கில வைத்தியர்போல் காட்சிகொடுத்தார். கைபிடித்துப் பார்த்து, இருதயத் துடிப்பு முதலியன பார்க்கும் ரப்பர்குழாய்—ஸ்டெத்தஸ்கோப்—வைத்து நெஞ்சிலும் முதுகிலும் பார்த்துக்கொண்டிருந்தார்.

அப்பொழுது ஆங்கில வைத்தியர் உள்ளே நுழைந்தார். உள்ளே சோதித்துக்கொண்டிருந்த வைத்தியரைப் பார்த்து ஆச்சரியமும், கோபமும் தோன்ற "துடிப்பு எப்படி இருக்கிறது?" என்றார்.

"துடிப்பே இல்லை. போய்விட்டது!" என்றார்.

உடனே அவரைக் கையைப் பிடித்து இழுத்து அப்பால் நிறுத்தி "எனக்குத் துடிப்பு இருப்பது கேட்கிறதா என்று பாரும். எனக்கும் போய்விட்டதாகவே இருக்கும்" என்றார்.

அப்பொழுதுதான் அந்த நாட்டு வைத்தியருக்கு விளங்கியது. காதில் மாட்டிக் கேட்கவேண்டிய பாகம் கழுத்தில் கிடந்ததை உணர்ந்தார்.

---


விற்பனையாகிறது!

பழந்தமிழரின் காதல் வாழ்வைச் சித்திரிக்கும் ஓரேகதை!

# காமமும் காதலும்

ஆ. கந்தசாமி பீ. ஏ. எழுதியது.

விலை அணா 0—8—0

கொழும்பு பிரபல பத்திரிகையாகிய "வீரகேசரி" 6—4—52 ஞாயிறு இதழ் இலக்கியப் பகுதியில் இக் கதையின் பெரும் பகுதிகளைச் சித்திரங்களுடன் வெளியிட்டு இதன் இனிமையைப் பெருமைப்படுத்தியுள்ளது!


---

# ஆண்களை நம்பாதே!

இளம் தம்பதிகள் இருவர் இங்கிதமாகக் கடற் காற்றை அனுபவித்துக்கொண்டு மணற்பரப்பில் அமர்ந்து மணிலாக்கொட்டையையும், முந்திரிப்பருப்பையும் கொரித்துக்கொண்டிருந்தார்கள்.

அவளது முகத்தில் மகிழ்ச்சி பொங்கி வழிந்துகொண்டிருந்தது. காரணம் அன்று அவளது பிறந்தநாள். இந்தப் பெண்கள் கோடி கட்டினாலே அன்று அவர்கள் நடை உடை பாவனைகளே அலாதிதான். அதிலும் இவள் பிறந்தநாள் பரிசாக தனது கணவன் வாங்கிக் கொடுத்த பட்டுச் சேலையைப் பவிசுடன் கட்டியிருக்கும்போது கேட்கவா வேண்டும்!

பெண்கள் தாங்கள் செய்துகொள்ளும் அலங்காரத்தைப் பிற பெண்கள் கண்டு பிரமிக்க வேண்டுமென்று நினைப்பது சர்வசாதாரணம். ஆண்களில் சில அசடுகளும் பிற பெண்களைச் சுற்றித்திரிவதுமுண்டு.

அதுபோலவே, அந்த உல்லாசத் தம்பதிகளின் எதிரே ஒருவன் வந்து உட்கார்ந்து அவளையே கவனித்துக்கொண்டிருந்தான். இது அவர்களின் அளவளாவலைத் தடுத்தது. அவன் பார்வை அவர்கள் இருவருக்குமே கோபத்தை மூட்டியது.

சிறிது நேரம் பொறுத்துப் பார்த்தனர். ஆனால் அவன் அடிக்கடி அவளைப் பார்ப்பது நிற்கவில்லை. அவளது கணவனது கோபம் உச்சத்தை அடைந்தது. உடனே எதிரே இருந்தவனை நோக்கி "ஏனய்யா உனக்கு அக்கா, தங்கை, தாரம் இல்லையா?" என்றான்.

இதை எதிர்பாராத அவன் முதலில் மிகவும் பயந்தேவிட்டான். பின் சமாளித்துக்கொண்டு "நீங்கள் தவருக நினைக்கவேண்டாம். இந்த அம்மா கட்டியிருக்கும் பட்டு வெகு நன்ருக இருக்கிறதே, நூறு ரூபாய் இருக்குமா அல்லது அதற்கு அதிகமாக இருக்குமா என்று தான் பார்த்துக்கொண்டிருந்தேன்" என்று கூறிக்கொண்டே மெதுவாக நழுவிவிட்டான்.

"பார்த்தாயா அவன் 100 ரூபாய்க்குமேல் மதிக்கிருன் விலையை. நான் 75 ரூபாய்க்கு வாங்கியது என்றதை நீ நம்பவில்லையே!" என்ருன் குஷியுடன் மனைவியிடம். அவள் சிரித்துக்கொண்டாள். ஆனுல் அவளுடைய மனது மட்டும் 50 ரூபாய்க்கு வாங்கியதுதானே என்று அடித்துக் கொண்டது.



# பெண் செலக்ஷன்!

திருவிழாக்களும், கோவில் விசேஷங்களும் வயது வந்த பையன்கள் பெண் பார்ப்பதற்காகத்தான் ஏற்படுத்தப் பட்டனவோ என்று சந்தேகப்படுகின்றனர் பலர். அப் படியே இருந்தாலும் இவைகளின் முக்கியத்துவத்தை இப்பொழுது சினிமாக் கொட்டகைகள் சம்பாதித்துக் கொண்டுவிட்டன!

"பெண்ணைப் பார்க்க வேண்டுமென்கிறான் மாப்பிள் ளைக்காரன்!" என்று மாப்பிள்ளை வீட்டார் கூறினால் மறு விநாடி பெண்வீட்டாரிடமிருந்து வரும் பதில் "இன்று மாலை முதல் ஆட்டத்திற்கு சினிமாவிற்குக் கூட்டிவருகி றோம். அங்கு வந்து பார்க்கச் சொல்லுங்கள்" என்பதுதான்.

தொழில் நிமித்தம் வெளியூர் சென்றிருந்த அவன் மூன்று ஆண்டுகளுக்குப்பின் சொந்த ஊருக்கு வந்திருந் தான் கல்யாணம் செய்துகொள்ள. பெற்றோர் மும்முர மாகப் பெண் பார்க்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள்.

அன்றொருநாள் அவன் தன் நண்பனுடன் சினிமா விற்குச் சென்றிருந்தான். "செம்படவனுக்குத் தூண்டி மேல் கண்" என்றபடி பெண்கள் குழாமில் கண்வீசினான்.

இணைந்திருந்த இரு இளங் குமரிகளுள் ஒருத்தியின்மேல் திருஷ்டி பதிந்தது. அவளை இன்னார் என்று அறிய சினிமா முடிந்தவுடன், அவர்கள் பின்னாலேயே சென்று வீட்டைக் கண்டுபிடித்து, மறுநாள் பெற்றோரிடம் மேற்படி வீட்டை அடையாளம் கூறி, அவ்வீட்டுப் பெண்ணையே நிச்சயம் செய்யச்செய்து மணவறையிலும் மகிழ்ச்சியுடன் அமர்ந்துவிட்டான்.

பெண்ணை அழைத்துவந்தார்கள். இலேசாகக் கடைக்கண் வீசினான். அவ்வளவுதான் திடுக்குற்று, களை பரத்துடன் தன் நண்பனை நோக்கினான். அவன் அவனிடம்வந்து, காதிற்குள் "சற்றுமுன்தான் கேள்விப்பட்டேன்; நீ அன்று பார்த்தது பெண்ணின் சிறிய தாயாராம். அதாவது இப்பொழுது பெண் கொடுக்கும் மாமனாருக்கு இரண்டாம் தாரமாக இரண்டு மாதங்களுக்குமுன் வந்தவளாம்" என்றான்.

---


நாரண-துரைக்கண்ணன்
"ஜீவா" தீட்டிய சிந்தனைக் களஞ்சியம்

# "சபலம்"

விலை அணு 0—12—0

சாதாரணமாக குடும்பங்களிலும், மக்களிடையிலும் காணும் உணர்ச்சிமிக்க நிகழ்ச்சிகளை, எளிய, விறுவிறுப்பான நடையில் அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார்!


---

# யார் சாமர்த்தியசாலி?

"என்டா குருட்டுப் பயலே! எதிரே ஆள் வருவது கூடத் தெரியவில்லையா? மேலே வந்து விழுகிறாயே!"

"ஏய்யா முட்டாள்தனமா உளர்ரே, கண்ணிருந்த நீயாவது விலகிப் போயிருக்கலாமே!"

"ஏன்டா என்ன சொன்னே? முட்டாளா? அயோக்கியப்பட்டவா! யாரைப் பார்த்துடா முட்டாள்னு சொன்னே?" என்று கைச்சட்டையை மடக்கிவிட்டார்.

"சரிதானையா நிறுத்து! சும்மா அளக்காதே! பல்லை உடைத்துவிடுவேன், வார்த்தையை வித்தியாசமாகப் பேசினால்" என்று வேஷ்டியை வரிந்துகட்டினான் மற்றவன்.

"அவ்வளவு தூரம் கொழுப்பேறிவிட்டதா? செருப்பால் அடிக்கணும் நாயை..." என்றுகூறி அருகில் கடை வாசலில் கிடந்த செருப்பு ஒன்றைத் தூக்கி ஓங்கினான்.

உடனே மற்றவன் மற்றொரு செருப்பைத் தூக்கினான். இதற்குள் கூட்டம் கூடிவிட்டது. கடைக்குள்ளிருந்து வந்த ஒருவர் இருவரையும் பிரித்து சமாதானம் செய்து இரண்டு திசையில் அனுப்பினார். இருவரும் ஒருவரையொருவர் திட்டிக்கொண்டே பிரிந்தனர்.

சண்டையைத் தடுத்துப் பிரித்துவிட்டவர் பழைய படியும் கடையை நோக்கி வெற்றிவீரர்போல் மீசையை முறுக்கிவிட்டுக்கொண்டு திரும்பினார்.

திடீரென்று அவர் முகம் மாறியது. "ஐயோ நேற்று வாங்கிய என் செருப்பையல்லவா ஆளுக்கொன்றாக எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்" என வெளியே ஓடி இருபுறமும் பார்த்தார். ஒருவனும் கண்ணுக்குப் புலப்பட வில்லை. ஆனால் அதே நேரம் அடுத்த தெருவின் கோடியில் அந்த இரண்டு சண்டைக்காரன்களும் சந்தித்து, 'அடே சீக்கிரம் வாடா, ஒருசமயம் வந்தாலும் வந்துவிடுவான் செருப்புக்காரன்!' என்றுகூறி விரைவாக நடந்தனர்.

---


குலை தள்ளிய வாழையின் வாழ்நாள்,
அதனுடைய காய் அறுக்கப்படும்வரைதான்!
காய் அறுக்கப்பட்ட வாழையாவது
கல்யாணப் பந்தல்களிலும், விசேஷ சுபகாரியங்களிலும்
முன் இடம் பெறுகின்றது.
ஆனால் அவள் வாழ்வு......?

**மகிழ்ச்சி ஆசிரியர் நா. சதானந்தம் எழுதிய**

**"விதியா?"** இரண்டாம் பதிப்பு

**விலை அணா 8**

**இன்றே படித்துப்பாருங்கள்!**


---

# ஆசை முகம்!

கூட்டம் பிரமாதமாக நடந்துகொண்டிருந்தது. பிரசங்கி அழகாக வள்ளுவர் குறள்பற்றி விரிவுரையாற்றிக் கொண்டிருந்தார். நீலநிற மின்விளக்குகள் மேடையில் பிரகாசித்துக்கொண்டிருந்தன. பெண்கள் ஒருபக்கமும், ஆண்கள் மற்ருெரு பக்கமுமாகக் குழுமி அமர்ந்திருந்தனர். ஒலிபெருக்கிகள் பிரசங்கியின் பேச்சுக்களை நீண்ட தூரம் கேட்கும்படி தெறித்துக்கொண்டிருந்தன.

சங்கீதக் கச்சேரிகளில் சில ரசிகர்கள் தாங்கள்தான் அனுபவித்து ரசிப்பதாக பிறர் நினைக்கவேண்டுமென்ருே அல்லது தங்களையறியாமலோ தலையை அசைத்தும், தாளங் களிட்டும் அமர்க்களம் செய்வதுபோல், சிலர் பிரசங்கியின் பேச்சுக்கு ஆஹா...ஊகு... போட்டுக்கொண்டிருந்தனர். சிலர் தங்கள் சொந்த விஷயங்களைப் பேசிக்கொள்ள, நண் பர்களையோ அல்லது உற்ருரையோ சந்திப்பதற்கு இப் பேர்ப்பட்ட இடங்கள்தான் தங்களுக்குஉகந்ததாகக் கருதி தங்கள் பிரசங்கங்களை ஆரம்பித்து, அடுத்தவர்களுக்கு இடைஞ்சல் என்பதையும் அறியாது நிகழ்த்திக்கொண் டிருந்தனர். எங்காவது கூட்டம் என்று முன்னல் ஒரு வரிசை உட்கார்ந்திருந்தால், நிச்சயம் பின்னல் ஒருவரிசை நிற்பார்கள். உட்கார இடமிருந்தாலும் சிலர் உட்கார மாட்டார்கள். எங்கு நின்ருலும் நிற்காவிட்டாலும் சில

ஆடவர்கள் பெண்கள் உட்கார்ந்திருக்கும் பகுதிக்குப் பின்னுல் நின்று காவல் (?) புரிவதிலேயே பெருமைகொள்வர்.

இம்மாதிரிதான் இரு வாலிபர்கள் அக்கூட்டத்தில் நின்று தூரத்தில் உட்கார்ந்திருந்த ஒரு பெண்ணின் பின் அழகை—பிறைச் சந்திரன்போல் கொண்டையில் நிறையப் பூவுடன் இருந்த அழகை—வர்ணித்துக் கிண்டல் செய்து கொண்டிருந்தார்கள். முகம் தெரியாததால் ஆள் இன்னுர் என்றுஅறிய ஆவலும் கொண்டனர். ஆனுல் அதிகநேரம் முயன்றும் முடியவில்லை. இறுதியில் நண்பர்களில் ஒருவன் நேரமாகிவிட்டது என்று பிரிந்து சென்றுவிட்டான். மற்றவன் மட்டும் காத்துக் கிடந்தான். கூட்டம் முடிந்தவுடன் அப்பெண்ணின் முகத்தைக் கண்டு அப்படியே தூக்குத் தண்டனை கிடைக்கப்பெற்றவன்போல் நின்றுவிட்டான். அவள் வேறு யாருமில்லை, அவன் தங்கை!

---


சந்தர்ப்பமும், சூழ்நிலையும் சேர்ந்துதான்
மனிதரின் மனதை ஆட்டிப்படைக்கின்றன.
இதற்கு எந்த ஆணும் பெண்ணும் விதிவிலக்காகார்!
சட்டம் குற்றமற்றவன் என்றுகூறி விடுதலை அளித்தால்கூட
சுற்றம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது பணமற்றவனை!

நா. சதானந்தம் தீட்டிய

**"மனப் புயல்"**

**விலை அணு 8**

**உங்களுக்கு உண்மையை விளக்கும்!**


---

# அவன் அழகு!

அவர் ஊரில் பணக்காரர் குழாமைச் சேர்ந்தவர். திரண்ட சொத்துடையவர். பிள்ளைகளுக்கும் குறைவில்லை. நான்கு பையன்கள், மூன்று பெண்கள். மூத்த பெண்ணிற்குக் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்தார். மாப்பிள்ளை பார்க்கும் படலம் வெகு மும்மரமாக நடைபெற்றது. காமா சோமா என்று எவனுக்காவது கொடுத்துவிட முடியுமா? அதிலும் தன் பெண்ணிற்காக நகை வகையில் பத்தாயிரம்வரை கொடுக்கத் தயாராக இருப்பவர். எனவே தன் அந்தஸ்திற்குத் தக்கபடியே கூடுமானவரை தேடினார். அதற்குரிய ஆட்களிடமும் சொல்லிவைத்திருந்தார்.

பெண் சுமாரான அழகுதான். கருப்பு என்றாலும் கவர்ச்சி இருக்கும் சிலரிடம். அந்த வகையிலும் அவ்வளவு அதிகம் கூறுவதற்கில்லை. இருந்தாலும், நகை நட்டுகளும், வைரக்கம்மல், நெக்லஸ்களும், விதவிதமான பட்டாடைகளும் சேர்ந்துகொண்டால், பணக்காரப் பெண்கள் அழகு தேவதைகளாக பிறர் கண்களுக்கு, அதாவது அவர்களைவிட வாழ்க்கைத் தரத்தில் குறைந்தவர்கள் கண்களுக்குத் தென்படுவது இயல்புதானே!

மொத்தத்தில் தன் பெண்ணின் அழகைவிட, அவளுக்காகக் கொடுக்கப்போகும் பெரும் தொகையை நம்பி பெரியஇடத்தை எதிர்பார்த்திருந்தார் பெண்ணின் தந்தை.

அவர் எதிர்பார்த்தபடி அவருக்கு இணையான ஒரு பெரிய இடத்தில் கிராக்கி வந்தது, ஊருக்குள் பல கல்யாணத் தம்பதிகளின் இணைப்புக்கு இடையேயிருந்து வேலை செய்யக்கூடிய ஒருவர் மூலமாக.

கடைசியாக நிச்சயதார்த்தம் ஆகவேண்டிய நேரத்தில், மாப்பிள்ளைக்காரன் பெண்ணைப் பார்க்கவேண்டுமென்று கூறிவிட்டான்—சாதாரண அழகுள்ள பெண்ணை வைத்துக்கொண்டிருப்பவர் பெரிய இடத்தை விரும்பும்போது, பெரிய இடத்து மாப்பிள்ளைக்காரன் அழகான பெண்ணை விரும்பாது இருப்பானா?

இவ்விதம் அவன் கூறியது பெண்ணின் தகப்பனாரைவிட, மாப்பிள்ளையின் தகப்பனாருக்குத்தான் பெரும் மண்டையடியாக இருந்தது. எப்படியும் இந்த முகூர்த்தத்தை நடத்திவிடவேண்டுமென விரும்பி, இணைப்புக்கு ஏற்பாடு செய்தவரைக் கலந்தார். அவரும் பெண்ணைக் காண்பிப்பதாக பையனைக் கூட்டிச் சென்றார். போகும் பாதையிலே "தம்பி, பெண்ணைக் காண்பிப்பதில் ஆட்சேபணை இல்லை; நன்றாகப் பார்த்துக்கொள். ஆனால் ஒன்று: பெண் உன்னைப் பார்த்துப் பிடிக்கவில்லை என்று கூறிவிட்டால், பின் கேவலமாகிவிடும். அதைமட்டும் கொஞ்சம் யோசித்துப் பார்த்துக்கொள்" என்று லேசாக வாழைப்பழத்தில் ஊசியைச் சொறுகுவதுபோல் கூறினார். இதன்பின்னும் பெண்ணைப் பார்க்கச் செல்ல அவன் என்ன பைத்தியக்காரனா?



# இடமில்லை!

"கார்டு விசில் ஊதிவிட்டான், சீக்கிரம்வாயேண்டி. இதுதான் பெரும் தொல்லை! இந்தப் பொம்மனாட்டிகளை ஊர்களுக்கு அழைச்சிண்டு போவது! ஓடிவா, ஓடிவா. அந்தண்ட வழியா ஏறு உள்ளே" என்று ஓட்டமும் நடையுமாக வந்த நடுத்தர வயதான தம்பதிகள் வண்டிக்குள் ஏறினார்கள்.

பெண்கள் என்றாலே இடம் ஒதுக்கிக் கொடுப்பது நம்மவர்களின் சர்வசாதாரணமான சுபாவமாச்சே. முன்னடியில் இருந்த ஒருவர் எழுந்து இடம் கொடுத்தார். அந்தப் பெஞ்சியில் நான்கு பேர் உட்காரவேண்டியதில் தம்பதிகள்போக மேற்கொண்டு ஒரு பெண்தான் உட்கார்ந்திருந்தாள். இடம் சௌகரியமாகக் கிடைக்கவே நன்கு அகலவிரித்து உட்கார்ந்துகொண்டனர்.

வண்டியும் புறப்படுவதற்கறிகுறியாக எஞ்சினும் 'ஊ......' என ஊளையிட்டது. அப்பொழுதுதான் தலை தெறிக்க இரண்டு நாட்டுப்புறப் பெண்கள் தாங்கமாட்டாத சுமையுடன் ஓடிவந்து "ஐயா...செத்த கதவைத் திறங்க... வண்டி புறப்படப்போகிறது...சீக்கிரம்.. சீக்கிரம்" என்று ஆவலாய்ப் பறந்தனர்.

முன்னடியில் உட்கார்ந்திருந்த தம்பதிகள் அசையவில்லை. அத்துடன் "போ...போ...இங்கு எங்கே இருக்குது இடம். அடுத்த வண்டியைப் பார்த்து ஏறு" என்று சாவதானமாகக் கூறினர்.

வண்டியும் நகர ஆரம்பிக்கவே, சற்று அப்பாலிருந்த மற்றொருவர் ஓடிவந்து கதவைத் திறந்து, அப்பெண்களை வண்டிக்குள் ஏற்றினார். முணுமுணுத்தனர் தம்பதிகள். வண்டியும் பிளாட்பாரத்தைக் கடந்துகொண்டிருந்தது. வந்த பெண்கள் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க "புண்ணியவாளன் நல்லா இருக்கணும்" என்று தங்களுக்கு உதவியவருக்கு நன்றி தெரிவித்தனர்.

"முன்கூட்டியே வரப்படாதோ?" என்றார் ஒருவர்.

"முன்னடியே வந்து அங்கிருந்த வண்டியில் தெரியாமல் ஏறிவிட்டோம். நல்லவேளையாக கடைசி நேரத்தில் ஒரு தம்பி அது ராமேஸ்வரம் போற வண்டி என்றும், இந்த வண்டியைக் காட்டி இதுதான் திருமங்கலம் போற வண்டி என்றும் கூறினன்" என்று கூறி வாய்மூடுவதற்குள் அந்தத் தம்பதிகள் "ஐயோ...அப்படின்ன இது தெற்கே போற வண்டியா? நாங்க இராமேஸ்வரம்ன போகணும்" என்று ஓடும் வண்டியிலிருந்து துள்ளி எழுந்தார்கள். காலி இடத்தை நிரப்பினர்கள் வந்த பெண்கள். நின்று கொண்டே சென்றார்கள் "இடமில்லே" என்ற புண்ணியவான்கள் அடுத்த ஸ்டேஷனில் இறங்கும்வரை.

---


# "தலைவர் காமராஜ்"

## விலை 1—8—0

**திரு. ஆர். கே. சண்முகம் முன்னுரையுடனும், காமராஜின் வாழ்க்கை வரலாறுடனும், பிரமுகர் பலரின் காமராஜ்பற்றிய நேரடிக் கருத்துக்களுடனும் கூடியது.**


---

# பிட் நோட்டீஸ்!

"ஏன் தம்பி! வேறு பெரிய ஆள் யாரும் கடையில் இல்லையா?" என்று கேட்டுக்கொண்டே நுழைந்தார், கோட்டும், சூட்டும் போட்ட டிப்டாப் பேர்வழி ஒருவர்.

"முதலாளி கொஞ்ச நேரத்திற்கு முந்தித்தான் காபி சாப்பிட வெளியே போயிருக்கிறார். உங்களுக்கு என்ன வேண்டும்?" என்றான் தனிமையாக இருந்த பையன்.

"கொஞ்சம் ஸ்குரூ ஆணி, பீரோ கைபிடி எல்லாம் வேண்டும்"

"அதற்கென்ன நான் எடுத்துக் காண்பிக்கிறேன்" என்று அருகிலிருந்த செல்ப்பிலிருந்து கைபிடி ரகங்களை எடுக்க ஆரம்பித்தான். அதற்குள் வந்தவர் "நயம் காவி இருக்கிறதா தம்பி?" என்றார்.

"அருமையான காவி இருக்குதுங்க. எடுத்துக் கொண்டு வரட்டுமா?"

"எங்கே? உள்ளேயா இருக்கிறது?"

"ஆமாங்க"

"சரி இரண்டு வீசை நிறுத்துக்கொண்டு வருகிறாயா?"

"கொஞ்சம் இப்படி உட்காருங்கள், ஒரு நொடியில் நிறுத்துக்கொண்டு வருகிறேன்" என்று கூறி உள்ளே சென்றான் பையன் துள்ளிக்கொண்டு. அவனுக்கு முதலாளி வருவதற்குள் கொஞ்சம் வியாபாரம் செய்து வைத்தால், சந்தோஷப்பட்டுக்கொள்வாரே என்ற ஆவல்.

அவன் சென்ற சில நிமிடங்களில் சாமான் வாங்க வந்திருந்தவர் "தம்பி! காவி இப்பொழுது வேண்டாம், நாளை வந்து வாங்கிக்கொள்ளுகிறேன். டவுன்பஸ் வந்து விட்டது, நான் போகிறேன். இதைவிட்டால் பின் அரை மணி நேரம் நிற்கவேண்டும்" என்று கூறிக்கொண்டே கடையைவிட்டு வெளியேறினார்.

பையனும் சலிப்புடன் வெளியே வந்தான். அதற்குள் எதிர்வரிசைக் கடையில் மூடை இறக்கிக்கொண்டிருந்த ஒரு தொழிலாளி ஓடி வந்து, வெளியில் வந்து நடைபோட்ட அந்த டிப்டாப் பேர்வழியின் கோட்டைப் பற்றி இழுத்துக் கடைக்குள் தள்ளினான். கடைப்பையன் விவரம் தெரியாது மிரண்டு விழித்தான்.

"ஏன் தம்பி, இவர் ஏதாவது சாமான் இங்கு வாங்கினாரா?" என்றான் அவன்.

"இல்லையே, காவிகூட நிறுப்பதற்குள் வேண்டாமென்று கூறிப் புறப்பட்டுவிட்டாரே!"

அடுத்த விநாடி 'பளார்...பளார்...' என்று நான்கு அறைவிழுந்தது அந்த நாகரீகத்தின் கன்னத்தில்.

"நாம் களவாடியதை எதிர்வரிசையிலிருந்து இவன் பார்த்துக்கொண்டிருந்ததை கவனியாதுபோய்விட்டோமே" என்ற சிந்தனையுடன் கோட் பாக்கெட்டிலிருந்து மூன்று நான்கு ஆணிப் பெட்டிகளை எடுத்து மேஜைமீது வைத்தான். சில நிமிடங்களில் அங்கு பெரும்கூட்டம் கூடவே அந்த பிட்நோட்டீஸின் கன்னத்தில் மேலும் பலரின் கைகள் விளையாடியதில் ஆச்சரியமில்லையல்லவா?

# சாகத் துணிந்தவன்!

அவன் அப்படி அலறினன், துடித்தான், துவண்டான், விம்மினன், விழுந்து விழுந்து கதறினன். யார் யார் தேற்றியும் அவனைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவன் நடவடிக்கைகளைக் கண்டு திகில் கொண்டனர் வந்திருந்த பலர். அவர்கள் எதிர்பார்த்தபடி செய்கையிலும் ஈடுபடத் துணிந்துவிட்டான்.

அறைக்குள் சென்றவன் சிறிதுநேரம்வரை திரும்பாதிருக்கவே சந்தேகப்பட்டு தேடிச் சென்றனர். ஆம்! அவன் கயிற்றை கழுத்தில்மாட்ட எத்தனம்செய்துகொண்டிருந்ததை அறிந்து அலறி, மீட்டிக்கொண்டுவந்து "என்ன செய்வது? நீ கொடுத்துவைத்தது அவ்வளவுதான்! 'ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ?' இனி மேற்கொண்டு நடக்கவேண்டியதைக் கவனி. நீ ஆண்பிள்ளைதானே" என்று சமாதானம் செய்தனர்.

அவனே "இனி நான் எப்படி வாழ்வேன்? அவள் இன்றி நான் வாழவா? உயிரும் உடலும்போன்ற இணைப்பில் உயிர் போனபின் உடல் எப்படி நடமாட முடியும்" என்று கூறி கண்ணீர் வடித்தான்.

இவ்வளவும் அவன் மனைவியை பிணக்கோலத்தில் சாத்தி வைத்திருந்த நிலையில் நிகழ்ந்தவை.

ஒருவழியாகப் பிணம் மயானத்திற்குக் கொண்டு சென்று எரிக்கப்பட்டது. அவன் போக்கைக்கண்ட பெரி

யோர்கள் அவன் அருகிலேயே இரவிலும் கண்விழித்துக் காக்க ஆட்கள் சிலரை நியமித்திருந்தார்கள்.

மறுநாள் அதிகாலையில் பிரேதத் தீயை அணைக்க அனைவரும் சென்றுகொண்டிருந்தார்கள். அவனும் கவலை யே உருவாகச் சென்றுகொண்டிருந்தான். நடந்துகொண் டேயிருந்தவன் திடீரென்று ஒருதெருக்கோடியில் துள்ளிக் குதித்துத் தாண்டி ஓடிப் பின் நடந்தான்.

இதைக் கண்ணுற்ற பெரியோர்கள் அந்த நிமிடம் முதலே அவனுக்குப் பாதுகாப்பிற்காக நியமித்திருந்த ஆட்களை வாபஸ் வாங்கிவிடத் தீர்மானித்துவிட்டனர். அவன் இனி தற்கொலை செய்துகொள்ள மாட்டான் என்று உறுதியாக முடிவுசெய்துகொண்டனர். அப்படி அவர்கள் உறுதியாகத் தீர்மானம் செய்ததற்குக் காரணம்; யாரோ "கழிப்புக் கழித்தல்" என்ற ஒன்றைத் தெருக்கோடியில் செய்திருந்ததைக் கண்டு அந்த இடத்தில் அவன் பளிச் சென்று தாவியதுதான். அதில் மிதித்தால் காலில் 'புண்' வரும் என்று பெரியோர்களால் கூறப்படும் மிரட்டலுக்குப் பயந்து தாவுபவன் இனி உயிரை விடவா போகிறான்?



# யாருக்கு ஓட்டு!

"தம்பி! நான் வரும் எலெக்ஷனில், இந்தத் தொகுதியில் சென்னை அசெம்பிளிக்கு அபேட்சகனாக நிற்கிறேன். உங்கள் ஓட்டுகளை எனக்குப் போட்டு ஆதரிக்கவேண்டும்' என்று வீதியின் ஒரு கோடியில் பிளசர் காரில் வந்து இறங்கி, சிறு சந்திலுள்ள வீடுகளில் வரிசையாகக் கூறிக்கொண்டே வந்த பிரபல பணக்கார அபேட்சகர் ஒருவர், அந்த ஏழையின் வீட்டையும் அணுகி பணிவுடன் வேண்டிக்கொண்டார். ஏழையும் பதறியடித்து எழுந்து வந்து வணங்கி அவசியம் அவருக்கே வாக்களிப்பதாகக் கூறினான். அவரும் புன்னகையுடன் மேலே செல்லலானார்.

அடுத்த நிமிடம் அவனது மனைவி "என்னுங்க நேற்று வந்து இவருக்கு எதிர்த்து நிற்கிறவரு கேட்டதுக்கும் அவருக்கே போடுவதாகக் கூறினீர்கள். இன்று......... பாவம் இந்த வீதிப்பக்கமே நடந்தறியாத பெரிய மனிதர்களை இப்படி........."

"சரிதான் போடி! இன்னைக்கும் நேத்தும் வந்தவர்கள் இனி ஐந்து வருடம் கழித்து வருவாங்க. ஏதோ வந்தவர்கள் மனது கோணாம சொல்லித்தான் அனுப்பணும்"

"அதுசரி, இரண்டு பேருக்குமே ஓட்டுப் போடு றேன்னு சொல்லி அனுப்பிவிட்டீர்களே, ஆனால் உங்களுக்குத்தான் ஓட்..........."

இதற்குள் அவன் அவள் வாயைத் தன் கையால் மூடினன். அவள் திமிறிக்கொண்டு "ஏன் என் வாயை மூடுகிறீர்கள்?" என்ருள்.

"நீ சொல்லப்போவது தெரிகிறது. சத்தம் போடாதே, அந்தப் பெரிய மனுஷன் காதில் விழுந்துவிடப் போகிறது. ஊழியர்களானல் யார் யாருக்கு ஓட்டு இருக்கிறது என்று ஜாபிதாவைப் பார்த்துக் கூறுவார்கள். ஆனல் இவர்கள் குறி பதவிதானே! நமக்கு ஓட்டு இல்லை என்பது எங்கே தெரியப்போகிறது. சாதாரண நாளில் இவர்களெல்லாம் நம் வீடு தேடி வரவா போகிருர்கள். அவர்களாகத் தெரிந்துகொள்ளும்வரை வந்துவிட்டுப் போகட்டுமே" என்று நிதானமாகக் கூறினன்.



# பாதுகாப்பாளர்!

இரவு மணி 8-50. மதுரையிலிருந்து விருதுநகர் வரை செல்லும் புகைவண்டி புகையைக் கக்கிக்கொண்டு புறப்பட்டது.

ஆரம்பத்தில் அநேகமாக நிறைந்திருந்த வண்டியில் ஸ்டேஷன்கள் கடக்கக் கடக்க இங்கொன்றும் அங்கொன்றுமாக ஆட்கள் உட்கார்ந்திருந்தார்கள். சிவரக்கோட்டை ஸ்டேஷனில் வண்டி கிராஸிங் இருந்த படியால் சற்று அதிக நேரம் நிறுத்தப்பட்டிருந்தது. எனவே சில ஜோக் பேர்வழிகள் வண்டியைவிட்டு இறங்கி பிளாட்பாரத்தில் உலாவ—அதே நேரம் பிறவண்டிகளில் என்னென்ன கோலத்தில் இருக்கிறார்கள் மக்கள் என்று காணப் புறப்பட்டார்கள்.

இங்கிலேயில் ஒரு கம்பார்ட்மெண்டில் 'தூக்கத்தில் இருப்பவர்களை எழுப்பினால் ஆயுள்கட்டை' என்று கூறும் பாட்டி பழமொழிகளைத் தூக்கி வைத்துவிட்டு டிக்கெட் பரிசோதகர் அவரது காரியத்தில் ஈடுபட்டார். தூங்கிக் கொண்டிருந்த ஒருவரை ஒருதடவைக்கு நான்கு தடவை தட்டி, குலுக்கி எழுப்பி டிக்கெட் கேட்டார். அவர் எழுந்து ஒரு பார்வை பார்த்துவிட்டு எதிர் சீட்டிலிருந்த துண்டையும், மேலேயிருந்த பெட்டியையும் காட்டி, 'கீழே இறங்கிப்போயிருக்கும் அவர் வைத்திருக்கிறார்' என்றார்.

பரிசோதகரும் மேற்கொண்டு செல்லலுற்றார். எதிரே வந்த வண்டி வந்து சென்றபின் இவ்வண்டி புறப்படும்

சமயத்தில் கீழே இறங்கியவர்கள் வண்டிக்குள் ஏறினர்கள் நாம் குறிப்பிட்ட வண்டியில் இறங்கியிருந்தவரும் வந்து, தன் துண்டை எடுத்து விரித்துப் படுத்துக்கொண்டார்.

வண்டி விருதுநகரை அடைந்தது. வண்டியிலிருந்தவர்கள், இறங்கும் சமயம் தூங்கிய இவரையும் எழுப்பினர்கள். எழுந்தவர் கண்ணைக் கசக்கிக்கொண்டே பெட்டியைத் தூக்க மேலே பார்த்தார். பெட்டி காணப்படவில்லை. அந்த வண்டியிலிருந்து இறங்கிக்கொண்டிருந்தவர்களிடம், "எதிரில் உட்கார்ந்திருந்தவரிடம் பார்த்துக் கொள்ளச் சொன்னேன். அவர்எங்கே?" என்று அலறினர்.

பிரயாணிகளில் ஒருவர் "அவர் டிக்கெட்டும்கூட உங்களிடம்தானே இருப்பதாகச் சொன்னர்" என்றார்.

இதைக்கேட்ட அவர் "ஐயையோ! அந்த ஆள் யார் என்றுகூட எனக்குத் தெரியாதே! வண்டியிலேயே உட்கார்ந்திருக்கிறுரே என்று பெட்டியைப் பார்த்துக்கொள்ளச் சொன்னேன். அட அயோக்கியப் பசங்களா!" என்று தவித்துப் புலம்புவதைக் கேட்டுக்கொண்டே தம்தம் காரியத்தைக் கவனித்தனர் பிறர்.



1-A
8-180

# இம்மாத 'மகிழ்ச்சி'



## வாசித்தீர்களா?

Sadhanandha Press, Virudhunagar—5-'52.